ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

மதுரகவி தாசன் இயற்றிய

# பென்குன்றம்

கண்டேன் கண்டேன் கண்ணுக்கினியானை
பண்டொரு நாளில் திருவேங்கடம் நின்றானை
அண்டரும் அறியானை, அடியார் தவம் இருந்து
நின்றான் இன்று பென்குன்றமே க

குன்றம் எடுத்துக் கொடுமழை தடுத்தான்
அன்று இரங்கி வேங்கடம் நின்றான்
இன்று அடியார் பணிந்தேத்த, பென்
குன்றம் தனில் குடிகொண்டானே உ

கொண்டான் என் நெஞ்சினை கோவிந்தன் என்பான்
கண்டார் மயங்கும் திருவேங்கடத்தான்
வண்டார் சோலை சூழ் திருவரங்கத்தம்மான்
கண்டோர் கண்குளிர பென்குன்றம் நின்றான் ந

நின்றான் என் நெஞ்சினில் வேங்கடத்து மாயன்
பண்பாடித் திரிவன் திருவடித் தொழுவன்
தென்னரங்கன் என் உள்ளத்துள் மாதவன்
கண்டார் பென்குன்றம் செய்த பயன் ச

பயன் ஒன்றிலேன் வேங்கடத்தான் தாள் பற்றினேன்
துயில் கொண்ட அரங்கன் திருவடி அமர்ந்தேன்
தூய தமிழ் கொண்டு பாமாலை சூட்டினேன்
உய்ய பென்குன்றம் வந்தென்னப்பன் உதித்தான் ரு

உதித்தான் எவ்வுலகும் வாழ நின்றான்
மதிவதனன் என் நெஞ்சில் நின்ற வேங்கடவன்
மிதித்தான் பாழ்மனதினை வினைகள் தீர
பதி பென்குன்றம் நின்றான் நெடியோன் சூ

நெடிய மாலே! திருவேங்கட மாயானே!
அடியார் வினை அறுக்கும் அரங்கத்தம்மானே!
பொடியேன் நின் அடியிணை பற்றினேன்
வடி பென்குன்றம் வாழ் அருமறையோனே! எ

மறைக்கும் அப்பாற்பட்டவன் என்தன் மாயவன்
மாறன் தமிழ் மாலையில் மகிழ்பவன், மாமலை
உறையும் உத்தம சீலன், இறைக்கும்
இறையாய் பென்குன்றம் நின்றான் வேங்கடவன் அ

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

வேங்கட மாமலை விண்ணோர் தொழுதேத்த
ஓங்குபெரும் அனந்தன் மீது நின்ற
நீங்காத செல்வத்து திருவேங்கடத்தான்
தாங்கு புகழ் பென்குன்றம் மகிழ்ந்தானே கூ

மகிழ்ந்து பென்குன்றம் நின்றானை, உள்ளிருள்
அகல காஞ்சியின் அனந்தன் வேங்கடார்யன்
முகில்வண்ணனைப் பாடிய இவ்வந்தாதியை
இகபரநாதன் திருவடியில் கண்டானே க0

---